| 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் | 5000/– |

**(iv) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள்**

**விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.3000/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.30000/–**

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| திருமண மண்டபங்கள் | 4000/– |
| விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | 2000/– |

மேற்கண்ட விபரப்படி உரிமக்கட்டணங்களை 01.04.2024– ம் தேதி முதல் நிர்ணயம் செய்து வசூலித்து உரிமங்கள் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2527/ 2023/எச்1)

**பொருள் எண்: 6**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள குத்தகை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுடன் கூடிய அறிக்கை 31.03.2024 உடன் முடிவடைய உள்ளது. 01.04.2024 முதல் 31.03.2027 வரை புதிய பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் பழைய கட்டண விகிதங்களை உயர்த்தி, புதிய கட்டண விகிதங்கள் வசூல் செய்ய அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4)துறை, நாள் 19.09.2008ன் படியும் நகர்மன்ற தீர்மானம் எண்.806 நாள் 25.01.2022 நகராட்சியில் (K.N.M.T) கலைஞர் நகர்புற மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தின் மூலம் தினசரி மார்க்கெட் புதிதாக கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வரும் நிலையில் உள்ளது. எனவே தினசரி மார்க்கெட் தினசரி கட்டணம் வசூல் உரிமம் கீழ்க்கண்டவாறு நகர்மன்ற தீர்மானம் எண்.573

நாள் 31.10.2023 ல் கீழ்க்கண்ட புதிய கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு பொது ஏலம் (ம) ஒப்பந்தபுள்ளி அறிக்கை வாயிலாக 27.12.2023 மற்றும் 10.01.2024 ஆகிய இரண்டு தேதிகளிலும் கோரப்பட்டது. இதில் தினசரி மார்க்கெட் சங்கம் மற்றும் பழைய குத்தகைதாரர் தினசரி கட்டணம் மிகவும் அதிகம் எனவும் தினசரி மார்க்கெட்டில் வியாபாரம் செய்யும் மக்கள் அனைவரும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள நபர்கள் எனவும், எனவே, இந்த கட்டணங்களை செலுத்த இயலாது என்று தினசரி மார்கெட் வியாபாரிகள் சங்கங்கள் மற்றும் மார்க்கெட் வியாபாரிகள் 11.10.2023, 30.10.2023 26.12.2023, 08.01.2024 ஆகிய தேதிகளில் நகராட்சி நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளரிடம் தினசரி கட்டணங்கள் மிகவும் அதிகமாக உள்ளது எனவும், இதனை குறைத்து வழங்கிட வேண்டும் என்று மனு கொடுத்துள்ளனர். மேலும், தினசரி கட்டணத்தை குறைத்து வழங்குவது குறித்து நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் நகராட்சி அலுவலர்களால் வியாபாரிகளுடன் பல கட்டங்களில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இதில் கட்டணம் குறைப்பது குறித்து எவ்வித முடிவும் எடுக்கப்படாததால் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோர யாரும் முன் வரவில்லை. எனவே, கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நகர்மன்றத் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்ட தினசரி கட்டணங்களை மறு நிர்ணயம் செய்வது குறித்தும் மீண்டும் ஏலம் (ம) ஒப்பந்தபுள்ளி கோருவது குறித்தும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | கடைகளின் அளவு | கடைகளின் எண்ணிக்கை | அரசு மதிப்பீட்டின் படி ஒரு கடையின் ஒரு நாள் வாடகை (ரூ) | ஏற்கனவே நகர்மன்ற தீர்மானத்தின் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | 2.40 X 4.00 m | 31 | 160/- | 120/- |
| 2. | 2.40 X 2.40 m | 131 | 100/- | 80/- |

மேற்கண்ட அட்டவணையின் படி ஒரு மாதத்திற்கு ஒரு நாள் வாடகை பொறியியல் பிரிவில் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வசூல் செய்ய வேண்டிய கட்டண விபரம் | பழைய தினசரி கட்டணம் (ரூ) | புதிய தோராய தினசரி கட்டணம் (ரூ) | நகர்மன்ற தீர்மானம் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை(ரூ) |
|---|---|---|---|---|
| 1. | காலியிடத்தில் கடை வைத்து வியாபாரம் செய்ய | 15.00 | 50.00 | 50.00 |
| 2. | விற்பனைக்கு கொண்டு வரும் கோழி தலைச்சுமை மற்றும் சைக்கிள் சுமை 1 கூடைக்கு | 10.00 | 30.00 | 30.00 |
| 3. | பாரமேற்றி வரும் கைவண்டி ஒற்றை மாட்டு வண்டி ஒரு தடவைக்கு | 25.00 | 75.00 | 75.00 |
| 4. | பாரமேற்றி வரும் இரட்டை மாட்டு வண்டி ஒரு தடவைக்கு | 25.00 | 75.00 | 75.00 |
| 5. | முழு பாரமேற்றி வரும் லாரி ஒரு தடவைக்கு | 100.00 | 200.00 | 200.00 |
| 6. | பாதியும் அதற்கு குறைவான பாரம் ஏற்றி வரும் லாரி ஒரு தடவைக்கு | 75.00 | 150.00 | 150.00 |
| 7. | விற்பனைக்கு கொண்டு வரும் நெய் 1 க்கு அல்லது அதற்கு குறைவான அளவுக்கும் | 5.00 | 20.00 | 20.00 |
| 8. | இதர இனங்களுக்கு வாரச் சந்தையில் உள்ள பட்டியல்படி வசூலிக்கவும், பாரமேற்றி வரும் மினிடோர் ஒரு தடவைக்கு | 50.00 | 100.00 | 100.00 |

**அலுவலக குறிப்பு :**

தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் அரசாணை எண்.181ன் படி ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோர நகர்மன்ற தீர்மானம் எண்.573 நாள்: 31.10.2023 இன்படி தினசரி கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோர அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் 27.12.2023 மற்றும் 10.01.2024 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் கோர யாரும் முன் வரவில்லை. இந்நிலையில் தினசரி கட்டணம் மிகவும் அதிகம் எனவும் இந்த கட்டணங்களை செலுத்த இயலாது என தினசரி மார்கெட் வியாபாரிகள் சங்கங்கள் மற்றும் மார்கெட் வியாபாரிகள் 11.10.2023, 30.10.2023 26.12.2023, 08.01.2024 ஆகிய தேதிகளில் நகராட்சி நகர்மன்ற தலைவர் ஆணையரிடம் தினசரி கட்டணங்கள் மிகவும் அதிகமாக உள்ளது எனவும், இதனை குறைத்து வழங்கிட மனு கொடுத்துள்ளனர். இந்நிலையில் தினசரி காய்கறிகள் வியாபாரிகள் சங்கம் (ம) அனைத்து விவசாயிகள் சங்கம் சார்பாக உள்ள தலைவர்களுடன் தினசரி

கட்டணங்கள் குறித்து பல கட்டங்களாக பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டது. இதில் எவ்வித முடிவும் எட்டப்படாத நிலையில் உள்ளது. எனவே இது குறித்து மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.1200/ 2020/எ−3)

**பொருள் எண்: 7**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், வாரச் சந்தை, சத்திரக் கடை மற்றும் ஆண்டு குத்தகை இனங்கள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் 27/12/2023 ம் தேதி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட உயர்ந்த பட்ச ஆண்டு வாடகை மற்றும் மாத வாடகை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | ஏலம் (ம) ஒப்பந்தபுள்ளி கோரியவர் பெயர் | சென்ற மாத வாடகை | PWD மதிப்பு | சந்தை மதிப்பு | உயர்ந்த பட்ச மாத வாடகை | உரிம காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பேருந்து நிலையத்தில் கிழபுறம் உள்ள கட்டிடத்தில் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் வாகன கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | K.கணேஷ் குமார் | 2,29,000/− | − | − | 2,51,500 | 01.04.2024 முதல் 31.03.2027 |
| 2. | புதிய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள கடை எண். 19A | S.கார்த்திகேயன் | 11615/− | 6598/− | 9000/− | 9500/− | ஒப்படைக்கும் தேதி முதல் 3 ஆண்டுகளுக்கு |
| 3. | புதிய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள கடை எண். 19B | S. ராமையா | 13225/− | 6598/− | 9000/− | 8000/− | ஒப்படைக்கும் தேதி முதல் 3 ஆண்டுகளுக்கு |
| 4. | வாரச்சந்தை வணிக வளாக கடை எண்.33 | K.மணிகண்டன் | 7000/− | 2546/− | 3122/− | 7000/− | ஒப்படைக்கும் தேதி முதல் 3 ஆண்டுகளுக்கு |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட உரிமம் இனங்களில் வரிசை எண்.1 அரசாணை எண்.181 இன் படி திரு.K.கணேஷ்குமார் என்பவர் உயர்ந்தபட்ச ஆண்டு வாடகையாக ரூ.

2,51,500/- கேட்டுள்ளார். இது சென்றாண்டு வாடகையை காட்டிலும் கூடுதலாக சென்றுள்ளதால் இதனை உறுதி செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

2. அரசாணை எண்.92 ன் படி புதிய பேருந்து நிலைய கடைகள் 19A திரு.K.கார்த்திகேயன் என்பவர் மாத வாடகையாக ரூ. 9,500/- கோரியுள்ளார். இது சென்ற மாத வாடகையை காட்டிலும் குறைவாகவும், PWD மதிப்பு, சந்தை மதிப்பை காட்டிலும் கூடுதலாகவும் சென்றுள்ளது. (பலமுறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட இனமாகும்). எனவே, இதனை உறுதி செய்து மன்றம் அனுமதிக்கலாம்.
3. அரசாணை எண்.92ன் படி புதிய பேருந்து நிலையம் 19B திரு. S.ராமையா என்பவர் மாத வாடகையாக ரூ.8,000/- கேட்டுள்ளார். இது பழைய மாத வாடகை மற்றும் சந்தை மதிப்பை காட்டிலும் குறைவாக சென்றுள்ளது. பொது பணித்துறை PWD மதிப்பு காட்டிலும் கூடுதலாக வாடகை வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தபுள்ளி கோரியவர் என்பதால் உறுதி செய்து மன்றம் அனுமதிக்கலாம்.
4. அரசாணை எண்.92 ன் படி வாரச்சந்தை வணிக வளாக கடை எண்.33 திரு.K.மணிகண்டன் என்பவர் மாத வாடகையாக ரூ. 7000/- கோரியுள்ளார். பழைய மாத வாடகை சரிசமமாகவும், பொதுப்பணித்துறை மற்றும் சந்தை மதிப்பை காட்டிலும் கூடுதலாக சென்றுள்ளதால் மாத வாடகையை உறுதி செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1200/ 2020/எ-3)

**பொருள் எண்:8**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்கள்- 34,35,36 இன்உரிம காலம் 31. 12.2023 உடன் முடிவடைகிறது . ( இரண்டாவது முறை), புதிய பேருந்து நிலைய கடை எண்.37 28.2.2024 உடன் முடிவடைகிறது. (முதல் முறை), வாரச்சந்தை வணிக வளாக கடை எண்- 11 31.01.2024 உடன் முடிவடைகிறது. ( மூன்றாவது முறை). மற்றும்
கடை எண்கள் .16,19,20 31. 08.2023 உடன் முடிவடைகிறது ( மூன்றாவது முறை). மேலும் அரசாணை எண் - 92 இன்படி 15 சதவீதம் உயர்வுடன் நீட்டித்துக் கொள்ள விருப்ப கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே, பொது ஏல நிபந்தனைகள் மற்றும் அரசாணை எண் 92 -இன்படி உரிய கட்டணம் பெற்று உரிமம் நீடித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அரசாணை எண் -92 இன் படி மேற்க்கண்ட கடைகளுக்கு நீட்டிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1200/2020/அ3)

**பொருள் எண்: 9**

நகராட்சி நிர்வாக ஆணையர் (பொ) சென்னை, அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 10173/2020/UGSS நாள்.02.09.2020 இன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் Internal Plumbing பணிக்கு ரூ.310.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு SRP&CO என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு 01.07.2021 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணி காலம் 12 மாதங்கள் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், ஒப்பந்ததாரர் தகுந்த நேரத்தில் பணி முடிக்கப்படாமல் காலம் நீட்டிப்பு செய்து வழங்க கோரப்பட்டது. ஒப்பந்ததாரருக்கு பலமுறை அறிவிப்பு வழங்கப்பட்டும் பணியில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை. இப்பணி மாநில அரசு மான்ய திட்டம் என்பதால் பணி உரிய காலகெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். ஒப்பந்ததாரர் அவர்களின் 30.12.2023 ஆம் தேதிய கடிதத்தில் தற்பொழுது உள்ள விலை நிர்ணயத்திற்கு மதிப்பீடு மறு சீராய்வு செய்து தரக்கோரியுள்ளார்கள். பணி ஒப்பந்த நிபந்தனையின்படி விலை மாற்றம் செய்ய இயலாது.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளில் ஒப்பந்த காலத்தில் பணி முடிக்கப்படாத பணி மற்றும் உரிய முன்னேற்றம் இல்லாத பணிகளின் ஒப்பந்தத்தினை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒப்பந்ததாரர் அவர்கள் போதிய பணி முன்னேற்றம் இல்லாததால் ஒப்பந்தம் இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தம் ரத்து செய்தமைக்கும்,ஒப்பந்தப்புள்ளிகோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.602/2020/இ1)

**பொருள் எண்:10**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் 10 வது மாநில உயர் மட்ட தொழில்நுட்ப குழு கூட்டம் (SLTC) 24.11.2023 காலை 11.30 மணி அளவில் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் நீர் நிலை மேம்பாடு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு பாசக்குட்டை கிராமம் க.ச.எண். 16/02

பகுதியில் நீர் நிலை மேம்பாடு பணிக்கு ரூ.11.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு பங்கு தொகை ரூ. 5.00 இலட்சம் , மாநில
அரசு பங்கு தொகை ரூ.3.00 இலட்சம் மற்றும் உள்ளாட்சி பங்கு தொகை ரூ.3.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.11.00 இலட்சம் ஆகும். நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 26467/20221/AMRUT-1-2 நாள்.12.01.2024 இன்படி சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.10 பாசக்குட்டை கிராமத்தில் நீர் நிலை மேம்பாடு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 06.02.2024 அன்று மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களால் கோரப்பட்டுள்ளது.

எனவே, நகராட்சி பங்கு தொகை ரூ.3.00 இலட்சம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண். 690/2020/இ1)

**பொருள் எண்: 11**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு-27 மேட்டுபாளையம் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் வசதிகள் இல்லாததால் மழைநீர் சாலையின் நடுவில் செல்கிறது, இதனால் சாலை குண்டு குழியுமாக போக்குவரத்திற்கு இடையூராகவும், சுகாதார கேடும் ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர், எனவே மேற்படி பகுதியின் கழிவுநீர் பிரதான சாக்கடையில் கழிவு நீர் குழாய்கள் மூலம் இணைக்கப்பட வேண்டும். இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.548/2022
/இ1)

**பொருள் எண்: 12**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கோம்புப்பள்ளம் தலைமை நீரேற்று நிலையத்திற்கு புதிய LTCT மின் இணைப்பு 75 KW அளவில் தாழ்வழுத்த மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின்சார வாரியம், ஊரகம் வடக்கு பகுதி அலுவலகத்தில் விண்ணப்பம் வழங்கப்பட்டது. இந்த இணைப்பிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்து பெறப்பட்ட கேட்பில் ரூ.224625/- ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டது. அவசர அவசியம் கருதி நகராட்சியின் குடிநீர் நிதியில் இச்செலவினம் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியத்தை முன்னிட்டு மன்ற தீர்மானம் எதிர்நோக்கி நகர் மன்ற தலைவரின் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.2,24,625/- செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.448/2018/இ1)

**பொருள் எண்: 13**

சத்தியமங்கலம் நகராட்சிக்கான, சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள்- 2018, விதி எண் (6) உப விதி (1)ன் படி, சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சிக்கு அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் அதற்கான விற்பனை கட்டணம் விவரம் குறித்த அறிக்கை ஈரோடு மாவட்ட அரசிதழில் 28.09.2020ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 28.09.2023 உடன் மூன்றாண்டுக்குள் முடிவடைவதாலும் மேற்படி விற்பனை கட்டணத்தினை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிட வேண்டும் என்பதாலும் புதியதாக திருத்தி அமைக்கப்பட்ட கீழ்க்கண்ட விற்பனை கட்டணத்தினை நிர்ணயம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனைக் கட்டணம் (பழையது) | விற்பனைக் கட்டணம் (புதியது) |
|---|---|---|---|---|
| 1 | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ. 750/- க்கு குறையாமல் | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ. 1500/- க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் - வருடத்திற்கு ரூ. 1500/- க்கு குறையாமல் | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ. 2000/- க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் - வருடத்திற்கு ரூ. 3500/- க்கு குறையாமல் | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ. 4500/- க்கு குறையாமல் |
| 2 | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் - வருடத்திற்கு | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் - |

| | | | | |
|---|---|---|---|---|
| | அல்லது நேர பகிர்வு) | | ரூ. 375/– க்கு குறையாமல் | வருடத்திற்கு ரூ. 750/– க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ. 750/– க்கு குறையாமல் | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ. 1000 /– க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ. 1500/– க்கு குறையாமல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ. 2250/– க்கு குறையாமல் |
| 3 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ. 750/– | வருடத்திற்கு ரூ. 1000 /– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ. 1500/– | வருடத்திற்கு ரூ. 2000 /– |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ. 3000/– | வருடத்திற்கு ரூ. 3500 /– |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ. 375/– | வருடத்திற்கு ரூ. 500 /– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ. 750/– | வருடத்திற்கு ரூ. 1000 /– |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ. 1500/– | வருடத்திற்கு ரூ. 1750 /– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைச்சுமை) | – | வருடத்திற்கு ரூ. 250/– | வருடத்திற்கு ரூ. 500 /– |

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2731 / 2014 / எப் 1 )

**பொருள் எண்: 14**

இந்நகராட்சி நகர் மன்ற தீர்மானம் எண். 610,611,610 மற்றும் 613/29.12.2023 இன்படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 24.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி

கோரப்பட்டது. கீழ்கண்ட பணிகளுக்கு ஒரு பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வீதம் வரப்பெற்றுள்ளன.

1) வேலையின் பெயர்– வார்டு எண்.1 9 மற்றும் 15 பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

மதிப்பீடு தொகை – ரூ.1,98,000 /–

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.ரங்கசாமி,ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.1,92,719/– | 1.47 சதவீத குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம்,ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.2,00,189/– | 2.35 சதவீத அதிகம் |

2)வேலையின் பெயர்– வார்டு எண்.23 அண்ணா நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

மதிப்பீடு தொகை – ரூ.1,50,000 /–

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஆறுமுகம்,ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.1,45,777/– | 0.78 சதவீத குறைவு |
| 2 | திரு.ரங்கசாமி,ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.1,51,137/– | 2.87 சதவீத அதிகம் |

3)வேலையின் பெயர்– வார்டு எண்.25 பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல்

மதிப்பீடு தொகை – ரூ.4,00,000 /–

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.ரங்கசாமி, ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.389088/– | 0.71 சதவீத குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.395144/– | 0.83 சதவீத அதிகம் |

4)வேலையின் பெயர்– வார்டு எண்.5 முல்லை நகர் முதல் இந்திரா நகர் சந்திப்பு வரை மழைநீர் வடிகால் அமைத்தல்.

மதிப்பீடு தொகை – ரூ.4,97,000 /–

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.4,90,989/– | 0.10 சதவீத குறைவு |
| 2 | திரு.ரங்கசாமி,ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.5,00,108/– | 1.75 சதவீத அதிகம் |

மேற்கண்ட அட்டவணையின்படி வ.எண். 1 மற்றும் 3 உள்ள பணிகள் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ரங்கசாமி, ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம், வ.எண். 2 மற்றும் 4 உள்ள பணிகள் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் ஆகிய ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022இ1)

**பொருள் எண்: 15**

அ) இந்நகராட்சி வரி வசூல் மையத்திற்கு வரி இரசீது அச்சு செய்யும் பிரிண்டர் வாங்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகி விட்டது. எனவே, புதிதாக இரண்டு டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர் தேவைப்படுகிறது என்று காசாளர் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். மேலும், நகரமைப்பு பிரிவில் ஆன்லைன் மூலம் நடத்தப்படும் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொள்ள ஏதுவாக நகரமைப்பு பிரிவில் உள்ள கணிணிக்கு வெப் கேமரா மற்றும் ஸ்பீக்கர் பொருத்தப்பட வேண்டும்.

ஆ) இந்நகராட்சி பொறியியல் பிரிவு உதவி பொறியாளர் அறைக்கு கனிணி வசதிகள் இல்லாததால் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவ்வப்போது கோரப்படும் தகவல்களை உடனுக்குடன் அளிக்கப்பட வேண்டியுள்ளது மற்றும் ஆன்லைன் மூலம் நடத்தப்படும் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொள்ள கணிணி ஒன்று தேவைப்படுகிறது என்று உதவி பொறியாளர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேற்கானும் உபகரணங்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ.1,75 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்: 16**

சத்தியமங்கலம் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் அவர்களின் கடிதம் ந..க.எண்.19/2024/ நாள். 24.01.2024 இல் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்தின் கீழ் செயல்படும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் அங்கன்வாடி மையங்களில் கழிப்பிடம் இல்லாத திருவள்ளுவர் திடல், கோம்புப்பள்ளம், தேள்கரடு வீதி, நிர்மலா தியேட்டர் ரோடு, ஆகிய 4 மையங்களுக்கு கழிப்பிட வசதி செய்து தரக்கோரி கடிதம் வரபெற்றுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு மற்றும் கண்காணிப்பு அலுவலர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி அங்கன்வாடி மையங்களில் உரிய கழிப்பிட வசதி, குடிநீர் வசதி ஆகிய வசதிகள் நகராட்சி நிதியில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்கள்.

எனவே, மேற்கண்ட நான்கு மையங்களில் கழிப்பிட வசதி தேவைப்படும் அடிப்படை பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு
எண்.548/2022/இ1)

**பொருள் எண்: 17**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.10173/2020/UGSS-2 நாள்.02.09.2020 இன்படி இந்நகராட்சிக்கு மூலதன மானிய திட்டம் 2020-2021 (CGF) திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்டம் புதை வடிகால் இணைப்புகள் - 6050 இணைப்புகள் வழங்க ரூ.310.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.686/2021/DO1 நாள்.18.02.2021 இன்படி மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. 01.07.2021 அன்று மேற்கண்ட பணிக்கு மெர்ஸ்.எஸ்.ஆர்.பி. கோ, ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு பணி வழங்கப்பட்டு நாளது வரை 1030 இணைப்புகள் வழங்கப்பட்டது, அதற்கான பட்டியல் தொகை ரூ.52.09 இலட்சம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. இன்னும் 5020 இணைப்புகள் வழங்கப்பட வேண்டும். ஒப்பந்ததாரர் பணிகளை மேற்கொள்ள மெத்தனமாக செயல்பட்டு வருவதாலும் இதர பணிகள் மேற்கொள்ள இடையூராக இருப்பதாலும் இப்பணியினை 12.01.2024 ரத்து செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

இப்பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப்பணி உரிய காலகெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டியுள்ளதால் தற்பொழுதுள்ள விலை விகிதத்தின்படி திருத்திய மதிப்பீடு
தயாரிக்கப்பட்டது. இம்மதிப்பீட்டில் 3350 இணைப்புகள் ரூ.257,91 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள இயலும். இப்பணிக்கு அரசு திட்ட நிதி ரூ.310.00 இலட்சத்தில் ரூ.52.09 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.257.91 இலட்சத்திற்கு திருத்திய தொழில்நுட்ப அனுமதி வேண்டி தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.602/2020/இ1)

**பொருள் எண்: 18**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.7 பாராஸ்ட் டிப்போ வடக்கு வீதி பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் கட்டப்பட்டு சுமார் 40 வருடங்களுக்கும் மேலாகிவிட்டதால் கழிவுநீர் கால்வாய் அடித்தளம் மற்றும் பக்கவாட்டு சுவர் சேதமடைந்து கழிவுநீர் தேங்கி துர்நாற்றம் வீசுவதாகவும், அப்பகுதி பொதுமக்களுக்கு அடிக்கடி காய்ச்சல் மற்றும் இதர நோய்கள் வருவதாக பொதுமக்கள் அடிக்கடி புகார் தெரிவித்து வருவதாக நகர் மன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, அவசர அவசியம் கருதி மேற்கண்ட வீதிகளில் உள்ள மழைநீர் வடிகால் பழுதுகள் சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.4.90 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்: 19**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17380/2022/தூ.பா.–2 நாள். 21.06.2023–ல் தெரிவிக்கப்பட்டதின்படி, தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் மண்டல அலுவலகத்தில் 24X7 கால் சென்டர் Help Line Number '14420" அமைத்து பாதாள சாக்கடைகள் கழிவுநீர் தொட்டிகள் சுத்தம் செய்யும் போது பாதுகாப்பற்ற நடைமுறைகள் மற்றும் அபாயகரமான நுழைவு குறித்த பொதுமக்களின் புகார்களை பதிவேடுகளில் பதிவு செய்து மண்டலத்தில் உள்ள நகராட்சி ஆணையாளர்களுக்கு அனுப்பி கழிவு நீரை பாதுகாப்புடன்
அப்புறப்படுத்துவதற்கு மேற்பார்வை பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் 2452/2023/பி1 நாள். 21.06.2023 இல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் மண்டல அலுவலகத்தின் தரைதளத்தில் கால் சென்டர் அமைக்க உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். இப்பணியினை கோபிச்செட்டிபாளையம் நகராட்சி மூலமாக மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. ஈரோடு மாவட்ட நகராட்சிகள் புன்செய் புளியம்பட்டி, சத்தியமங்கலம், கோபிச்செட்டிபாளையம் மற்றும் பவானி நகராட்சிகள் பகிர்ந்து வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் இச்செலவினம் விரைவில் திருப்பி விடுவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

கோபிச்செட்டிபாளையம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1461/2023/இ1 நாள். 03.01.2024 இல் மேற்படி பணி செய்யப்பட்டதற்கான இந்நகராட்சி பங்குத்தொகையான ரூ.1,25,000/– இந்நகராட்சியிலிருந்து வழங்க கோரி கடிதம் வரப்பெற்றுள்ளன. எனவே, ரூ.1,25,000/– ஐ கோபிச்செட்டிபாளையம் நகராட்சிக்கு தொகை வழங்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம்

நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண். 97/2024/இ1)

**சத்தியமங்கலம்**
நாள்: 24. 01. 2024

**நகர்மன்ற தலைவர்**

**சத்தியமங்கலம் நகராட்சி**